1979 மார்ச் 10]

பெருந்துறை காசநோய் மருத்துவ மனைக்கு நகராட்சியின் கொடை.

*வினா எண் 326—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சி, பெருந்துறையில் உள்ள க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு கொடுக்க உள்ள பணத்தை கொடுக்காமலிருந்து வருவது உண்மையா?

(ஆ) அதனால் நோயாளிகளை அனுமதிக்கும்படி நகராட்சியினால் பரிந்துரை செய்ய முடியாமலிருப்பது உண்மையா?

(இ) இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) மேற்படி காசநோய் ஆஸ்பத்திரிக்கு 1975–76, 1976–77-க்கு நன்கொடை வழங்கும்படி கோயமுத்தூர் நகராட்சிக்கு 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் நாளில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அரைகுறை அரசியல் ஸ்தாபனமாக இருக்கக்கூடிய நகராட்சி இப்படி மிக முக்கியமான டி.பி. சானிடோரியத்திற்குக் கொடுக்கக்கூடிய பணத்தைக்கூடக் கொடுக்காமல் வைத்திருப்பதற்கு என்ன காரணம்? நகராட்சியிலே பணம் இல்லாததா அல்லது வேறு எந்த காரணத்தால் அவர்கள் பணத்தைக் கொடுக்கவில்லை என்பதை அரசு கேட்டறிந்ததா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கொடுக்க வேண்டிய பணம் என்ற வகையில் தருவதில்லை. நன்கொடை தருகிற பணம் என்ற முறையில் அந்தப் பணத்தை வழங்குவதற்கு சில விதிமுறைகள் வேண்டுமென்று அந்த வகையில் காச நோய் துறை இயக்குநரிடமிருந்து சில விவரங்கள் கேட்கப்பட்டன. அந்த விவரங்கள் வந்ததற்குப் பிறகு முடிவு எடுக்கலாம் என்று அரசு இருந்தது.

[முற்பகல் 9–40]

ஆனால் அந்த மருத்துவமனையிலிருந்து அதன் கௌரவச் செயலாளரின் கடிதத்திற்கொப்ப இந்த ஆணை பிறப்பிக்கப் பட்டது.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, பெருந்துறையில் உள்ள க்ஷயரோக ஆஸ்பத்திரியில் கோவை நகராட்சிக்கென ஒரு சில படுக்கைகள் ஒதுக்கியிருப்பதாக அறிகிறோம். அது எவ் வளவு படுக்கைகள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதைப்பற்றிய விவரம் இல்லை. நகராட்சி பரிந்துரைக்கின்ற சில நோயாளிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விதி யிருக்கிறது.

திரு. சீனி. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மதுரை மாவட்டத்தில் வரிச்சூரில் மருத்துவக் கல் லூரி மாணவர்களால் ஒரு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு வாரத்திற்கு இரண்டு முறை செயல்பட்டு வந்தது. தற்பொழுது அங்கு ஊழியர்களுக்கு ஊதியம் அளிக்க இயலாது என்று ஊராட்சி ஒன்றியம் அறிவித்தபிறகு அந்த மருத்துவமனை செயல்படாமல் இருப்பது பற்றி அரசின் கவனத்திற்கு வந்துள்ள தா? அப்படியென்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது மூலக்கேள்விக்கு தொடர்பு அற்றது.

திரு. கு. ரமணி: அந்த மருத்துவமனைக்கு இப்படி வர வேண்டிய பணம் வராததால் ஐந்தாறு மாத காலத்திற்கு அந்த மருத்துவமனை ஊழியர்களுக்கு ஊதியம் வழங்காமல் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரிய வந்திருக் கிறதா? அதை ஒழுங்குபடுத்த, அரசாங்கத்தின் கட்டுப்பாட் டிற்குள் இருக்கின்ற ஸ்தாபனங்கள் கொடுக்க வேண்டிய பணத் தை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே மருத்துவமனையில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி பற்றித் தெரிய வில்லை. ஆனால் நகராட்சிகளிலும் நெருக்கடி இருக் கிறது.

1979 மார்ச் 10]

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆண்டு தோறும் இந்த நகராட்சி மூலமாக அந்த மருத்துவமனைக்கு நன்கொடை கொடுக்கப்படுகிறது. எனவே, காலதாமதத்தைத் தவிர்க்க, போன ஆண்டு கொடுத்த தொகையைப் போலவே, ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர் போட்டு தொகையை அதிகப்படுத்தினால்தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு வர வேண்டியிருக்கும், எனவே, ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர் போட்டு—ஆண்டு தோறும் கொடுக்க வேண்டிய தொகையைக் காலதாமதம் இல்லாமல் கொடுக்க உத்தரவு போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மண்பாண்டத் தொழிலாளர்கள்

*வினா எண் 327— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குலாலர், குயவர், மண்ணுடையார், கும்பாரன் என்றுள்ள மண்பாண்டத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இணைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகை

*வினா எண் 328—திரு. கே. சுப்ரவேலு : மாண்புமிகு அரிசன நலத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு அளிக்கும் உதவித்தொகை காலம் கடந்து விடுதி நிர்வாகிகளுக்கு கிடைப்பதால் மாணவ மாணவிகள் கடுமையான தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பது அரசிற்கு தெரியுமா?